**முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**
**முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி.**
**O.S.7/2026**

வா.சா.1 தேதி.13.07.2026

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆர்.சரவணன் | த/பெ. | ராமலிங்கம் |
| வயது | 35 | தொழில் | முதுநிலை மேலாளர், கனரா வங்கி, மங்கநல்லூர். |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் இந்த மனுவில் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டது. எனது தரப்பில் ஆவணங்களாக. முதுநிலை மேலாளரான எனக்கு கொடுத்த Authorization letter **வா.சா,ஆ.1** ஆகவும், 20.08.2022 தேதியிட்ட வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த கடன் விண்ணப்பம் அசல் **வா.சா.ஆ.2** ஆகவும், 20.08.2022 தேதியிட்டு பிரதிவாதி எழுதிக்கொடுத்த Agreement Cum Deed of Hypothecation அசல் **வா.சா.ஆ**.3 ஆகவும், 04.03.2025 தேதியிட்டு பிரதிவாதி எழுதிக்கொடுத்த Acknowledgement of Debt and Security அசல் **வா.சா.ஆ.4** ஆகவும், 11.04.2025 தேதியிட்டு வாதி வங்கியில் தாக்கல் செய்த கணக்கு பேரேட்டு நகல் **வா.சா.ஆ.5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.